Q22:38·216T
N26
225636
636


ஸ்ரீ திருப்பதி வெங்கடாசலபதி

புராண · க்ஷேத்திர ஸ்தல மகாத்மியம்

ஐப்பசி · 1926.

Q22:38.4b.T
N26.
225636.

133
294.5



OFFICE OF THE REGISTRAR
3-JAN
MADRAS

ஸ்ரீவேங்கடேச பரப்பிரம்மணேநம:

# ஸ்ரீ திருப்பதி வெங்கடாசலபதி

# புராண க்ஷேத்திரஸ்தலமஹாத்மியவைபவம்.

## ஸ்ரீவேங்கடேஸ்வர தோத்திரம்.

நாராயணாவென பாராயணம் பண்ணும் நாள்களிலே
வாராதசெல்வமும் வந்திடுமே வளர் ஆயுளுமே
தீராரோகமும் திசைதப்பிப் போய்விடும் தேமநா
வார்த்திருப்பதி வாழ்வெங்கடாசல வள்ளலின்றே.

அலர்மேலு மங்கையை மார்பில் அணிந்து பக்தகோடிகளுக்கு உண்டாகும், பிணி பயம் ஜனனமரண துக்கங்களை போக்கி ரக்ஷிக்கும் பொருட்டாகஸ்ரீதிருப்பதி புண்ணியக்ஷேத்திரத்தில் நின்றபக்தகோடி களுக்கு ஆநந்தத்தை விளைவிக்கும் அமிர்தமாக யிருக்கின்றது. உன் சரித்திரங்களை கேட்பது காதுக்கு ரத்னாபரணங்களாக இருக்கின்றது உன் பூஜைகள் கைகளுக்குபொன்பூஷணங்களாகஇருக்கின்றது.உன்னை நினைப்பதுஇகபரலோகங்களில் சர்வசுகங்களை அடைவதற்குகாரண பரமபதப்பிராப்திக்கும் உன் தரிசனம் சர்வபாவங்களைபோக்கி சாக்ஷாத் ... பக்தகோடிகள்களும்

## நைமிசாரண்யத்தில் பிரஸ்தாபனை.

சௌனகாதிமுனிகள்சூதமாமுனியால்சகலபுராணங்களையும்விசித்திரகடனசிகாமணியாகிய எம்பெருமான் கதைகளைக்கேட்டுஆநந்தகடலில் மூழ்கினவர்களாய்முடிவில் இவ்வாறுசொல்லத்தொடங்கினார். ஓ சூதமாமுனியேஇவ்வுலகத்தின்கண் 108 திருப்பதிகள் உண்டல்லவா அவைகளில் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்டம், தோதாத்ரி,சாலக்கிராமம், நைமிசம், பதரிகாஸ்ரமம், காஞ்சிபுரம், வெங்கடாசலம்என்னும் 8 முக்கிய திருப்பதிகளில் வெங்கடாசலம் என்கிற இத்திருப்பதி எல்லா திருப்பதிகளிலும் மிகவும் மேலானதாக எப்படி ஆயிற்றது தயவுசெய்து விவரிப்பாய்.

## ஸ்ரீ சூதமாமுனியின் வாக்கியம்.

ஓ முனிகளேகேளும் ஸ்ரீமன்னாராயணன் சகல சராசரங்களுக்கு ஆதாரமானவனாகவும் பிறப்பு இறப்புஇல்லாத நித்தியானந்தமூர்த்தியாய் அனந்தகல்யாணகுண அக்ஷயாங்கள சொரூபனாய் இருக்கின்றான். பார்க்கடலில் நிர்மலமான அந்தக்கருணனாய் ஆதிசேஷனுடைய ஆயிரம் தலைகள்என்னும்மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்டு இடதுபுரத்தில் மகாலக்ஷிமியும் நாபியில் பிரம்மதேவனும் பிரகாசிக்க அவர்பெருமையை சொல்லுவதற்கு நாரதர் பராசர் வியாசர் அம்பரீஷன் முதலிய மகாமுனிகளால் முடியாமல் இருக்க என்னால் முடியுமோ ஆனாலும் லக்ஷிமிபதியாகிய எம்பெருபான் உங்களையும் என்னையும் உலகத்தில சர்வஜீவகோடிகளையும் ரக்ஷிப்பார். ஆகையால் என் சக்திக்கி தக்கபடி சொல்லுகிறேன் சந்தோஷமாக கேளீர்.

## பிரம்மாவின் பிரப்பு.

ஆதியில் பார்கடலில் சயனித்திருக்கும்எம்பெருமான் திருநாபி கமலத்தில் சதுர்முகபிரமாபிறந்து சகலலோகங்களை சிருஷ்டிசெய்தார். நாலாயிரம்யுகங்கள் அவ்வுலகங்களை ரக்ஷிக்க பிரம்மாவின் பகல் முடிந்துவிட்டது. அப்பொழுது இரவுவர பிரம்மா தூங்கிவிட்டார். இருள் எங்கேயும் [illegible]ண்டது சூரியன் அக்கினியை அளவில்லாமல் பூமியின்மேல்விகினன் அதனால் ஸ்தாவர ஜெங்கமெல்லாம் அடங்கி போய்விட்டது. இருண்டமேகங்கள் அபாரமாக ஆகாயத்தில் வருஷங்களைக் கொட்ட தொடங்கி[illegible]



னால் உலகமெங்கும் ஜலம் நிரம்பிவிட்டது. அப்போது நீர்பளுவுக்கு தாளாமல் பூமி கடலுக்குள்மூழ்க இரண்ணியாக்ஷதன் என்னும் ராக்ஷசன் அதை ரஸாதலலோகத்திற்கு கொண்டுபோய் அநேககாலம்சுகமாய் அனுபவித்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்க, பிரம்மாவின் இரவுகாலம் முடிந்து பகல்வருகிறசமயத்தில் மறுபடியும் பிரம்மாவை எழுப்புவதற்கும் சிருஷ்டி உண்டாக்குவதற்கும் எண்ணம்கொண்டு ஸ்ரீமன்னாராயணன் சுவேதவராக அவதாரத்தை எடுத்தார்.

## வராக அவதாரம்.

கண்ணைமூடி திறக்கிறகாலத்துக்குள்ளாக ஆகாயம் பூமிநிறைந்துவிட்டதைப்போல் பயங்கரமாகிய கோரைகளுடன் வராகவதாரத்தைக்கொண்டு ஈரேழுபதினான்கு லோகங்கள் கிடுகிடென்று நடுங்க கர்ஜனை செய்துக்கொண்டு பூமியை மறுபடியும் எடுத்துக்கொண்டுவர கடலில் பிரவேசித்தார். அப்போது ரஸாதலத்திற்குப்போக கோபமுள்ளவனாய் வீராவேசத்துடன் அந்தராக்ஷஸவீரன்சண்டைக்குவந்தான். ஹரிசண்டையில் அவன் சிரத்தை தண்டு தண்டுகளாக பயங்கரமான கோரைகளால் கிழிக்க அந்தராக்ஷஸன் படிய ரத்தமானது பிரவாகங்களாக கடலெங்கும் நிரம்பிவிட்டது. அதைப்பார்த்து சித்தசாத்திய முதலிய தேவகணங்கள் கிடுகிடென்று நடுங்கிவிட்டார்கள் அப்போது பூமியை மறுபடியும் நிலைநிறுத்தி .பிரம்மாவை எழுப்பி சிருஷ்டிசெய்யும்படி உத்திரவுசெய்தார். தேவகணங்கள் அந்தவராகமூர்த்தியின்பேரில் புஷ்பங்களை வருஷித்து ஜெயஜெயஹரியென்று சப்தம்செய்தார்கள்.

## கருடருடன் சம்பாஷணை.

இவ்விதமாக வீராதிவீரனாகிய ஹரி தன்காரியம் முடிந்தபிறகு திரும்பிபார்க்கயில் கைகளைகட்டிக்கொண்டு சரணாகதனாக நின்றிருந்தகருத்மந்தனைப்பார்த்து இவ்விதமாகசொன்னார். ஓபக்ஷேந்திரனே பயங்கரமாகிய கோரைகளுடன் பேருபருவத்தைப்போன்ற ஆகாரத்துடன் எவ்விதமாக நான் வைகுண்டத்திற்கு வருவேன் லக்ஷிமிதேவி என்ரூபத்தைப்பார்த்து பயப்படாதோ ஆகையால் நான் இவ்வுலகத்திலேயே நின்றுவிடுவேனாகவும், இப்படிசொன்ன ஹரியினுடைய வாக்கியங்களுக்கு ஆச்சர்யப்பட்டுக்கொண்டு பக்ஷீந்திரன் ஓ சுவாமி!

உங்கள்ஹிருதயத்திலேயே லக்ஷ்மிதேவி எப்போதும் குடியிருக்க ஏன்
பயப்படுவார் தாங்கள் பூமியை எடுக்கும் காரணத்துக்காக பயங்கர
மான அவதாரத்தைக்கொண்டீரே தவிர மற்றொன்றும்இல்லை. ஆகை
யால் தயவுசெய்து வைகுண்டம் வருவீரென்று பிரார்த்தித்தான்.
அதற்கு எம்பெருமான் ஓ பக்ஷிசிகாமணியே என்பக்தகோடிகளை
விட்டு நான் எவ்விதமாய் இருப்பேன். அவர்களை ரக்ஷிக்கும்பொருட்
டாகவும் அவர்களுக்கு நேரிடும் இடையூறுகளைப்போக்கி ஆதரிக்கும்
பொருட்டாகவும் அவர்களுக்கு என்தரிசனத்தினாலும் கிருபாகடா
க்ஷத்தினாலும் பாவங்களைப்போக்க பரிசுத்தர்களாகசெய்து வைகுண்
டப்ராப்தியைத் தருவதற்காகவும் உலகத்தில் தருமவிரோதிகளையும்
கொடூரமானவர்களையும் ராக்ஷஸர்களையும் கொன்று தருமபரிபாலனம்
செய்வதற்காக இவ்வுலகத்திலேயே நிற்பேன். ஆகையால் நீவைகுண்
டத்திற்குப்போய் லக்ஷ்மிதேவியுடன் என் வார்த்தைகளைச்சொல்லி
கிரீடாசலத்தை உன்சிரத்தின்மேரில் வைத்துக்கொண்டு கூடியசீக்கிற
த்தில்வருவாய், இவ்விதமாகச்சொல்லி ஸ்ரீமந்நாராயணன் தான்நிற்ப
தற்கு நல்ல இடத்தை தேடிகொண்டு கௌதமியாற்றிற்கு சமீபத்திற்
தெற்கில் சுவர்ணமுகியாற்றிற்கு வடக்கில் திவ்யஸ்தலத்தைப் பார்த்
து பக்ஷிபதியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

## கருத்மந்தன் லக்ஷ்மிதேவி சம்பாஷணை.

கருத்மந்தன் வைகுண்டத்துக்கு போய் லக்ஷ்மிதேவியை கண்டு
ஸாஷ்டாங்க தெண்டநிட்டு இவ்விதமாக சொல்லலுற்றான்
மூன்றுலோகங்களையும் ரக்ஷிக்கும்லோகமாதாவே ஜலத்தில் முழுகின
உலகத்தை மறுபடியும் கொண்டுவருவதற்காக பயங்கரமாகிய வராக
வதாரம் எடுத்து இரண்ணியாக்ஷனைகொன்று உலகத்திலேயே நிற்கும்
பொருட்டாக கிரீடாசலத்தை என்சிரத்தின்மீது கொண்டுவரும்படி
யாக்யாபித்தார் ஆகையால் மனவுசெய்தேன் என்றுசெல்ல லக்ஷ்மி
தேவி அந்த பயங்கரமாகிய ரூபத்தைதரிசிக்க ஆவலுடயவளாய் இரு
க்கின்றேன் ஆகையால் ஸ்ரீஹரியை சீக்கிரத்தில் அழைத்துகொண்டு
வரும்படிசொல்ல அதைகேட்டு கருத்மந்தன் தாயே? நான் இவ்விடம்
வரச்சொல்லி எவ்வளவு சொல்லியும் அவர்கேட்காமல் பக்தகோடிக
ளை ரக்ஷிக்கும்பொருட்டாக உலகத்திலேயே நிற்பேன்யென்றும் வை



குண்டம்வந்தால் தன் பயங்கரமாகிய ரூபத்தை தாங்கள் பார்த்து
பயப்படுவீர்களென்றும்சொன்னார். அதைகேட்டு லக்ஷ்மிதேவி மிகவு
மாச்சர்யப்பட்டு ஓ பக்ஷிராஜனே அந்த பகவானுடைய மார்பில்
குடிஇருக்கும் நான் ஏன் பயப்படுவேன் அங்குஷ்டமாத்திரராய் சய
ணித்தபோதும் கூர்மாவதாரம் முதலிய அவதாரங்கள் எடுத்தபோ
தும் அவர்க்குள் நானிருந்தேன் இதை அவர்மறந்தும் அவ்விதமாய்ச்
சொன்னது ஆச்சரியம். அவர் இவ்விடம்வாராமல் போனாலும் நான்
அவ்விடம் வருவேன் என்றுசொல்லி தான்ஒருகளையோடு கிரீடாசல
த்தையும் கருத்மந்தன் ஸ்ரீஹரி சந்நிதானத்திற்கு கொண்டுவந்தான்.
அப்போது முப்பத்து முக்கோடி தெய்வங்களும் மும்மூர்த்திகளும்
இத்திருப்பதி புண்ணியக்ஷேத்திரத்துக்குவந்து பகவானை யனேகவித
மாக கொண்டாடினார்கள். ஓ சுவாமி லக்ஷ்மிதேவியை மார்பில்யணிந்
து உங்கள் சௌமியரூபத்தை தரித்துஉலகத்திலேயேநின்றுராக்ஷஸர்
களையும் துன்மார்க்கர்களையும் கொன்று பக்தகோடிகள்யுடைய பாவ
ங்கள்போக்கி ரக்ஷிப்பாய் சரணம் சரணம் என்று ஓசைவிட்டார்கள்.
அதற்கு பகவான்பயமென்று சொல்லி பக்தகோடிகளை ரக்ஷிப்பேனெ
ன்று பிரதிக்கினை செய்தார்.

## ஸ்ரீ திருப்பதியின் யுகங்கள் பேர்.

கிருதாயுகத்தில் விருஷபாசுரன் என்கிறராக்ஷஸன் பகவானோடு
சண்டைசெய்து மடிந்தபடியால் விஷபாத்ரி என்றுபெயர், த்ரேதா
யுகத்தில் அஞ்சனாதேவி குழந்தைகள் இல்லாமல் மதங்கமாமுனிசொ
ன்னதைப்போல் ஸ்ரீமந்நாராயணன் பாதகமலங்களை தொழுதிருந்து
வாயு அனுக்கிரகத்தினாலே அனுமாரைபெற்றதினால் அஞ்சனாசலம்
என்று பெயர், துவாபரயுகத்தில் ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்
கும் பலா பலங்களைப்பற்றி வாதம்நேரிட ஆதிசேஷன் மலையைச்சுற்
றிக்கொள்ள அதை வாயுபகவான் அப்புரம எறிந்து விட்டபடியால்
ஆதிசேஷன் வைகுண்டத்துக்குபோக வெட்கபட்டு இவ்விடத்திலே
யே அந்தர்தானபடியால் இதற்கு சேஷாத்திரி என்றுபெயர், கலியுக
த்தில் ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மீசமேதராய் இவ்விடம்நின்று பக்தகோ
டிகளுடைய பாவங்களைதகித்து, மோக்ஷத்தை கொடுப்பதினால் வெங்க
டாசலம் என்றுபெயர்.

## புஷ்கரணி மஹத்துவம்.

ஈஸ்வரனை அடைந்து கங்காபவானி ஸமஸ்த தீர்த்தங்களிலும் மேலானநதிரூபமாய் இருப்பதைக்கண்டு ஸரஸ்வதி அக்கங்கையைபார்க்கிலும் புண்ணிய பிரதமானநதிரூபமாக இருக்கவெண்ணி ஸ்ரீ ஹரியைகுரித்து தவம் செய்தாள். அப்போது தன்புத்திரனை புலஸ்திய பிரம்மா அவ்விடம்வர தன்புத்திரனென்றெண்ணி மரியாதைசெய்யாமலிருந்தாள். அவரதற்கு கோபித்துக்கொண்டு உனக்கு ஸர்வதீர்த்தோத்தம நதிரூபமுண்டாகாமா போகக்கடவென்று சாபம்கொடுத்தார். பிறகு நாராயணமூர்த்தி பிரசன்னவராக அவளைக்கண்டு நமஸ்கரித்து தன்மனோபிப்ராயங்களைசொல்ல அவர் நீபுலஸ்திய பிரம்மாவால் உண்டானசாபத்தால் ஸர்வோத்தம நதிரூபமாகமாட்டாய். ஆனால் சேஷாசலத்தில் சரோரூபமடைந்து ஸமஸ்த்த தீர்த்தங்களில் சிரேஷ்டமுடையவளாய் ஸ்நானம்செய்தவர்களுக்கு சகலபாபங்களை நசிக்கசெய்தால் உன்னிடத்தில் சமஸ்ததீர்த்தங்களும் மார்கழிமாதத்தில் ஸ்நானஞ்செய்ய தம்மிடத்தில் பாபாத்துமாக்கள் ஸ்நானஞ்செய்து வருகிறதினாலுண்டான பாவங்களை நிவர்த்தியடைவார்களென ஸரஸ்வதி சரோரூபமாக அவதரித்து சுவாமி புஷ்கரணியென விளங்குகிறாள்.

ஓ செளனகாதி முனிவர்களே, ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மி நீளாதேவியுடன்கூடி புஷ்கரணியில் கிரீடிப்பதினால் இதுபரிபளமாகவும் சுப்பிரதமாகவும் இருக்கின்றது. கோடிதீர்த்தங்களைப்பார்க்கிலும் மேன்மையுடையதாய் பக்தகோடிகளுக்கு நன்மையுண்டாக்குவதில் கர்பகவிருக்ஷத்தைப்போலிருக்கின்றது. பானமும் தரிசனமும் பாவங்களைப்போக்கி பரிசுத்தர்களாக பக்தர்களைச்செய்ய அவ்விடத்திலேயே குடியிருந்து தபஜபங்களும் ஸ்நானபானங்களும் செய்துக்கொண்டிருக்கும் தன்யர்களுடைய பலத்தை என்னசொல்லலாம். நல்லோர்களுக்கும் தேவர்களுக்கும் ஸ்திரவாசமாகிய இப்புண்ணியபுஷ்கரணியில் ஸ்நானம்செய்வது பாவங்களைப்போக்கி அளவற்றபுண்ணியங்களையுண்டாக்கும். புஷ்கரணிதீர்த்தம் ஒரு தீர்த்தமாகவே தோனறினாலும் அதில் ஒன்பதுதீர்த்தங்கள் அந்தர்பூதமாய் இருக்கின்றது. அவைகள்யாவன,குபேர-காலவ-மார்க்கண்டேய-அக்கினி-எம-வசிஷ்ட-வாயு-வருணசரஸ்வதி தீர்த்தங்களாம்.



## ஸ்ரீ திருப்பதி மலையின் பிரதாபம்

புண்ணியர்களுக்கு இது தங்கத்தைப்போல் மின்னிக்கொண்டும் பாவிகளுக்கு பார்க்கவே பயமுருத்துக்கொண்டும் இருக்கும் கலியுகத்தில் கர்களாய்தோன்றி துன்மார்களுக்கு இருண்டதாயிருக்கும். லட்க்ஷ்மி வாசகமாய் கோடிபக்தர்களுக்காகிலும் குறைவில்லாததாய் இருக்கும். ஞானிகளுக்கும் யோகாப்யாசிகளுக்கும் அஷ்டமாதி சித்தர்களுக்கும் முக்கியஸ்தானமாகவும், சித்தைஉண்டாக்கும் புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கும்.

## ஸ்ரீ திருப்பதி அனந்த நாமம்.

சருத்பந்தன் கொண்டுவந்ததினால் சருடாசலமென்றும் சிந்தனைகளை தீர்க்கும் ஆகையால் சிந்தாமணியென்றும், ஸ்ரீராமர் பூர்வத்தில் வந்ததினால் ராமகிரியென்றும், கிருஷ்ணமூர்த்தி வந்ததினால் கிருஷ்ண கிரியென்றும் நரசிம்மமூர்த்தி இரண்ணியனைக் கொன்றதினால் நரசிம்மாசலமென்றும், பக்தகோடிகளுக்கு காமிதார்த்தங்களை கொடுப்பதினால் சர்பகிரியென்றும், கனகம் நிரைந்ததாசையால் கனககிரியென்றும், ஞானிகளுக்கு ஞானம் அதிகரிப்பதினால் ஞானாத்திரியெனறும், நீலனென்பவன் குடியிருந்ததினால் நீலகிரியென்றும், லக்ஷ்மிவசிப்பதினால் ஸ்ரீநிவாசமென்றும், நாராயணன் தவம்செய்ததினால் நாராயணகிரியென்றும், சர்வபுண்ணியதீர்த்தங்கள் இருப்பதினால் தீர்த்தகிரியென்றும், வைகுண்டத்தில் இருந்துவந்ததினால் வைகுண்டகிரியென்றும், புஷ்கரணியிருப்பதினால் புஷ்கரகிரியென்றும் பெயர்.

## சோழராஜா சாபம் அடைதல்.

ஸ்ரீபூதேவி நீளாதேவி சமேதராய் ஹரி நித்திய முக்தர்களைப் பார்க்கப் பிரியமுள்ளவராய் வைகுண்டத்திற்குப்போக சேஷாத்திரியில் இருந்த வராகமூர்த்தி விஸ்வகர்மாவால் ஏர்படுத்திய நகரத்தை அந்தர்தானம்செய்து இச்சாவிஹாரமாய் திரிந்துக்கொண்டிருந்தார். அதைதிரிலோகஸஞ்சாரியும், திரிகாலக்ஞான ஸம்பன்னரும், ஸர்வஜீவதயாபாருமாகிய நாரதமாமுனி அறிந்து பிரம்மாவுக்கு தெரிவிக்க அவா ஸ்ரீஹரி பூமியில் இருநதபரியந்தம் ஜனங்கள ஸத்துவகுணமுள்ளவர்களாய் பாபவிமோசனர்களாய் பரிசுத்தர்களாய் இருந்தார்கள். ஸ்ரீஹரி இல்லாமற்போனால் கலியுகமாயை மேலிட்டு பாவங்களின்

பெருக்கினால் நரகப்பிராப்தி யடைவார்களாகையால் நீ ஸ்ரீஹரியை மறுபடியும் வரவழைக்க ஏதாவது நல்லவுபாயம் செய்யவேண்டுமென, ஜான்னவி ஆற்றங்கரையில் கஸ்யபாதி முனிகள் எக்ஞயம்செய்ய அவர்களிடம் நாரதர்போய் எக்ஞயபலத்தை யாருக்கு தருவீரென்று கேட்டார். திருமூர்த்களில் மோக்ஷத்தை கொடுக்கக்கூடிய கடவுள் யாரோ அவருக்கு தருவோமென்று சொல்லி அதை விசாரிப்பதற்காக பிருகு மாமுனியை அனுப்பித்தார்கள். அவர் சத்தியலோகம்போய் தபோ ஜனங்களுடன் கொலுவிருந்து பிரம்மாவைப்பார்த்து கும்பிட்டு உபகாரச்சொல்லுவதற்குமுன்பாக உட்கார்ந்ததினால் பிரம்மா கோபம் அடைந்தார். அதைபார்த்து பிரம்மா ரஜோகுணத்தாரென்றும் ஆகையால் அவருக்கு தேவாலயம் இல்லையென்றும் நிட்சயித்து கைலாயத்திற்குப்போய் பார்வதிசமேதராய் கிரீடித்துக்கொண்டிருந்த சிவபெருமான் அரண்மனைக்குள் நுழைந்து திடீலென்று நிற்க பார்வதிதேவி வெட்கமடைய அதற்கு கோபத்துடன் கண்கள் இரத்தத்தைப்போல் சிவந்திருப்பதைபார்த்து சிவபெருமான் தமோகுணரென்றும், ஆகையால் அவருக்குதேகபூஜை யில்லாமல் லிங்கபூஜை உண்டாயிருக்கிறதென்றும் அறிந்து பிறகு வைகுண்டத்திற்குப்போய் ஸ்ரீலக்ஷ்மிசமேதராகிய பெருமானை காலால்மார்பிலுதைக்க அவரதற்கு அந்தமகாமுனிகளுடைய காலுக்கு நோயுண்டாயிருக்குமென்று ஆதரிக்கமுனிவர் விஷ்ணுவே சத்துவகுணத்தாரென்றும் மோட்சத்தை கொடுக்கக்கூடியவரென்று நிட்சயித்தார். அப்பொழுது மார்பிலிருந்த லட்சுமிதேவி கோபித்துக்கொண்டு கொல்லாபுரம்வந்துசேர ஹரி திருப்பதியில் பாம்பு புத்தில் லட்சுமியை பிரிந்தவிசனத்துடன் வந்திருந்தார். அப்பொழுது பிரம்மாவும் ருத்திரனும் பசுகன்றுரூபங்களை தரித்து சோழராஜாவின் பசுமந்தைகளில் சேர்ந்து புத்தினிடம்வந்து க்ஷீரத்தால் ஹரியை திருப்திசெய்துக்கொண்டுவர பசுவுக்கு பாலில்லாமல் போவதை சோழராஜமனைவியறிந்து அதைக்கண்டுபிடிக்கும்படி இடையனுக்கு உத்திரவுசெய்தாள். பசுவுபாலை புத்திலிடுவதைக்கண்டு இடையன்கோபித்துக்கொண்டு தன்கோடலியால் நெற்றிபின்பேரிலடிக்க ஹரிதன்சிரசை கொடுத்தபடியால் அடிப்பட்டு ரத்தபிரவாகம்வர அதைகண்டு பயந்து இடையன் மடிந்தான். அதை விசாரிப்பதற்கு



சோழராஜாவர அவர்பேயாக போககடவதென்று சாபம்கொடுத்தார், அப்பொழுது அந்தராஜன் நடுநடுங்கி தன் சாபவிமோசனமாவதற்கு வேண்டினான் அதற்கு ஸ்ரீஹரி நீ இந்தசாபத்தை கலியுகமிருக்கும் பரியந்தம் அனுபவிக்கக்கடவாய். ஆனால் நான்ஆகாசராஜனுடைய புத்திரியான பத்மாவதியை விவாஹம்செய்வேன். அப்பொழுது நவரத்ன கசிதமான கிரீடம்செய்து எனக்கு சமர்ப்பித்தால் அதைநான் வெள்ளிக்கிழமைதினங்களில் ஆறுநாழிகை தரிப்பேன். அந்தகாலம் மாத்திரம் உனக்கு பிசாசுரூபத்தால் கஷ்டம் நேரிடாதென்றார்.

### ஸ்ரீ ஹரி வராஹஸ்வாமியை சந்தித்தல்.

அதற்கு பின்பு ஸ்வாமி தன்சிரத்தில் பட்ட அடியால் நோய் அடைந்தவராய் தேவகுருவாகியபிரகஸ்பதியைநினைத்தார், நினைத்தமாத்திரத்தில் எதிரில்வந்து நிற்க அவரிடம யாவற்றையும் சொல்ல அவரதற்கு எருக்கம்பருத்தியை பாலில் தோய்த்து கட்டினால் ஆறிவிடுமென்று சொன்னார். ஒருநாள் மருந்தைக்கொண்டு வருவதற்காக ஸ்வாமிகாலையில் புரப்பட்டுப்போக யச்சமயத்தில் வராஹஸ்வாமி விரஷபாலசூரனைக்கொன்று கோபத்துடன்வர எதிரில் ஸ்ரீஹரி நரரூபமாகநின்றிருப்பதைப்பார்த்து இவரும்ஓர்ராக்ஷஸனென்றெண்ணி அவரை பின்தொடர்ந்தார். அப்பொழுது ஹரி சமீபத்திலிருந்த ஒரு புத்தில் பிரவேசித்தார். வராஹமூர்த்தி யவ்விடம் வந்தவர் ஸ்ரீ ஹரியென்றறிந்து சங்கதிகளெல்லாம் தெரிந்துகொண்டவருக்கு நூறடியிடம் கொடுக்கிறதாகவும் யதற்கு கிரயம்கொடுக்கவேணுமெனவும் கேட்டார். அதைகேட்டஹரி தன்னை லக்ஷ்மிதேவிவிட்டு கொல்லாபுரம் போய்விட்டாளென்றும் அதனால தன்னிடம் பொருள் இல்லையென்றும் ஜனங்களிடம் சாமான்னிய நரனைப்போல் பிச்சைஎடுத்து கடன் கொடுக்கிறேனென்றும் தான் ஜனங்களை வரவழைத்து உங்கள் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து உங்களை கும்பிட்டு காணிக்கைக்கொடுக்கும்படி ஏற்பாடுசெய்கிறேனென்றும், முன்போஜனம் உங்களுக்குகொடுத்து பின்னால் நான் புசிப்பேனென்றுசொல்ல வராஹஸ்வாமிகேட்டு சந்தோஷப்பட்டவராய், நூறடிநிலம் அளந்துகொடுத்தார். தன்னிடம்சமயல்செய்து வருகிற வகுளமாலிகை என்பவளை ஸ்ரீஹரிக்குஉபசரணை செய்யும்படி நேமித்தார்.

### வகுளமாலிகை யென்பவள் யார்?

த்வாபரயுகத்தில் கம்ஸன், சாணூரர், பேகாசுரன், சிசுபாலன் முதலிய துன்மார்க்கரை சங்கரித்து சன்மார்க்கரை ரக்ஷிக்கும்பொருட்டாக ஸ்ரீஹரி கிருஷ்ணாவதாரம் யெடுத்தபொழுது அவர்லீலாவதார திருவிளையாடல்களை பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந்த யசோதாதேவி குணானுபந்தத்தால் பிரம்மதேவர் வகுளமாலிகையாக சிரு

ஷ்டித்து வராஹஸ்வாமி சன்னதியில் தொண்டு செய்துக்கொண்டிருக்கும்படி நேமித்தார்.

### லக்ஷ்மிதேவி ஹரியுடன் கலகம் செய்தல்.

திருமூர்த்திகளை பரீக்ஷிக்கும்பொருட்டாக பிருகுமாமுனி ஸ்ரீஹரியின் மார்பில் உதைத்தார். மார்பில் இருந்த லக்ஷ்மிதேவி மிகவும் கோபங்கொண்டு ஸ்ரீஹரியைநோக்கி இவ்வாறுசொன்னாள். ஓஸ்வாமி, மார்பில் உதைத்த பிருகுமாமுனியின்பேரில் கோபம் எள்ளளவாகிலும் கொள்ளாமல், சந்தோஷப்பட்டுக்கொண்டு ஸன்மானித்தீர். ஆகையால் உங்கள் சரணாரவிந்தங்களை நினைத்துக்கொண்டு எவ்விடமாவது போய்விடுவேன். சர்வபூதங்களில் நிறைந்திருக்கும் பரம்பொருளென்றெண்ணாமல் கெர்வத்தினால் உதைத்த பிரபுவை தண்டிக்காமல் போனீர். ஆகையால் எம்மனதுக்கு இந்தகாரியம் எவ்வளவுமாத்திரமும் ஒப்பாது. நான் எங்கேயாவது போய்விடுவேனென்று மிகுந்தகோபமுள்ளவளானாள் அதற்கு ஸ்ரீ ஹரி லக்ஷ்மிதேவியைப்பார்த்து ஓலக்ஷ்மி நீ இவ்விதமாக கோபம் அடைவது தக்கதல்ல. பிரம்மதேவனுக்கு குமாரனான பிருகு உனக்கு பேரனாய் இருக்கிறான். பிள்ளைக்கு பிள்ளையாகிய பிருகுவின் பாதம்பட்டதினால் என்னகுறை உண்டாகும். கெற்பத்தில் குழந்தை உதைத்தால் தாயுக்கு கோபம்உண்டாகுவது தர்மமோ, அண்டபிண்டசராசரங்களை கற்பத்தில் தரித்திருக்கும் நாம்பக்தர்களுடைய சிறியகுற்றங்களை மன்னிக்காமல்போவது நியாயமாகுமோ. இதல்லாமல் பிருகுமகாபிராம்மண சிரேஷ்டன் தபசிகளில் சிறந்தவன், தத்வஞானி, உண்மையான பக்தியை என்மேல்நிருத்தின அன்பன், ஆகையால் நீ அவன்செய்ததை குற்றமென்றெண்ணாமல் க்ஷமித்து சாந்தமுள்ளவளாவாய்.

ஸ்ரீஹரி எவ்வளவு சொல்லியும் கேழ்க்காமல் கோபங்கொண்டு லக்ஷ்மிதேவி வைகுண்டத்தைவிட்டு கொல்லாபுரம் சேர்ந்தாள். அப்புரவாசிகள் அந்த ஜெகன்மாதாவை அனேகவிதங்களாக பக்திபூர்வமாய் கொண்டாடி கொண்டிருந்தார்கள்.

### பத்மாவதி ஜனனம்.

சந்திரகுலத்தில் பாண்டவ தௌஹித்ரவம்சத்தில் ஸுவீரனென்றும் ஓர் ராஜனுக்கு ஸுதர்மனென்றோர் பிள்ளையிருந்தான். அவன் பிள்ளையில்லாமல் வெகுகாலம் ஸ்ரீவெங்கடேசஸ்வாமியை நோக்கி



தவம்செய்த ஆகாசராஜனென்றோர் பிள்ளையை யடைந்தான். அவன் தரணிதேவியென்னும் ஒருபெண்ணை விவாஹம்செய்து அனேககாலம் சுகமாய்வாழ்ந்தான். அவனுக்கு பிள்ளையில்லாமல் வெகுகாலம் சிந்தித்து பிறகு தன் குருவாகிய பிருகஸ்பதியைகண்டு குறைகளைசொல்ல அவர் புத்திரகாமேஷ்டியாகம் செய்தால் ஸந்தானம் உண்டாகுமென அதற்கு எக்ஞசாலையை வருகையில் ஓர்தாமரமலரும் அதினிடமாக ஒருதிவ்ய ஸௌந்தரிய மங்கள கனகவிக்ரஹத்தைபோன்ற ஓர் பெண்குழந்தையும் பார்த்தார்கள். ஆகாசராஜன் அக்குழந்தையை தன்பத்தினியிடம் கொடுத்து மிகவும் பிரீதியுடன் வளர்த்துக்கொண்டிருந்தான் தாமரபத்மத்தில் உண்டானதாகையால் அந்தபெண்ணுக்கு பத்மாவதியென்று பேரளித்தார். பிறகு அந்தராஜனுக்கு வஸுதானென்றோர் பிள்ளைபிறந்தான். சிலநாளைக்கு பத்மாவதி பருவமடையவளாய் ஒருநாள் தன் தோழிமார்களுடன் புஷ்பவனத்தில் பூமலர் கொய்துக்கொண்டிருந்தாள்.

### ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பத்மாவதியை சந்தித்தல்.

இப்படியிருக்கையில் புத்திலிருந்த பெருமான் வேட்டையாடயெண்ணினார் அப்பொழுது ஓர் வெள்ளைகுதிரையைக்கண்டு அதன்மீது ஏறிப்புறப்பட்டார், எதிரில் ஓர் காட்டானையைப்பார்த்து அதைத்துரத்தி பின்சென்றார் அந்தயானை வெகுதூரம்ஓடி பிறகுதிரும்பி சரணம்செய்து ஓஸ்வாமி அடியேனை காருமென அப்பார்த்தாமன் அதைக்காத்தருளி திரும்புகையில் அவ்விடம் பூமலர் கொய்துக்கொண்டிருந்த பத்மாவதியைக் கண்டார் குதிரையினின்றிறங்கி பத்மாவதியினிடஞ்செல்லுகையில் பத்மாவதி தன் தோழிகளையாவரென விசாரிக்கச்சொன்னாள். அதற்கு ஸ்வாமி தான் சந்திரவம்சபரம்பரையெனவும், க்ஷத்திரியகுலமெனவும், வசுதேவன் தேவகிதேவி தாய்தந்தைகளெனவும் தன்பேர் கிருஷ்ணனெனவும் கூற பத்மாவதிகேட்டு தன்வரலாற்றையும் தெரிவித்தாள். அப்பொழுது எம்பெருமான் தன்னை விவாஹம்செய்துகொள்ளும்படி கேட்டார், அதற்கு பத்மாவதி கோபங்கொண்டு தன்தோழிகளால் அவரைகற்களால் அடிக்கச்செய்தாள். எம்பெருமான் அவ்வடிகளை பொருக்கமாட்டாமல் திரும்பி வெங்கடாத்திரிக்கு வந்து துயரத்துடன் இருந்தார்.

### வகுளமாலிகையை தூது அனுப்புதல்.

புற்றில்சேர்ந்து பத்மாவதியை நினைத்துக்கொண்டு மவுனமாய் இருந்த ஹரியை வகுளமாலிகைக்கண்டு விசாரித்து அவர்மனோபிப்ராயத்தைத்தெரிந்து ஸ்வாமி நான் எவ்விதமானாலும் பத்மாவதியை உங்கள்மீது பிரியமுள்ளவளாகும்படி செய்வேனென்று சொல்லி ஸ்வாமியின் உத்திரவுபெற்றுக்கொண்டு ஆகாசராஜன் பட்டணத்துக்கு புரப்பட்டாள். வகுளமாலிகை அப்பட்டணத்திற்கு வருவதற்குமுன்பாக.

### ஸ்ரீ ஹரி குறத்தி வேடம் தரித்தல்.

ஹரி குரத்திவேடம் தரித்துக்கொண்டு வகுளமாலிகையுக்தியாக விவாஹபிரஸ்தாபனை செய்வாளோ செய்யமாட்டாளோ என்று சந்தேகித்து ஆகாசராஜன் பட்டணமாகிய நாராயணபுரத்தில் பிரவேசித்து வீதிகளில் குரிசொல்லுவேன் என்றும் பச்சைகுத்துவேன் என்றும் கூறினார். இப்படியிருக்க நாராயணபுரத்தில் பத்மாவதி நந்தவனத்தில் ஹரியைகண்டது முதல் தாபஜ்வரமுள்ளவளாய் அன்னபானங்களின்மேல் இஷ்டமில்லாமல் விசனத்துடன் இருந்தாள். அதைதெரிந்து தாய்தந்தைகளாகிய தரணிதேவியும் ஆகாசராஜனும் மிகவும் விசாரப்பட்டு பிராம்மணோத்தமர்களை வரவழைத்து பத்மாவதியின் நிஜஸ்திதியைசொல்ல அவர்கள் ருத்திராபிஷேகம்செய்து அஜ்ஜலத்தை கொடுத்தால் தாபஜ்வரம் நீங்குமென்றார். அப்பொழுது அரசன் அபிஷேகம்செய்வதற்கு ஏற்பாடுசெய்ய கோவிலிடம் அநேக சுமங்கலிஸ்திரீகள் வந்துசேர அவர்களோடு வகுளமாலிகை சேர்ந்துகொண்டு தன்னையும் தரணிதேவியிடத்திற்கு இட்டுக்கொண்டுபோகும்படி கேட்டுக்கொண்டாள். இப்படியிருக்க ஊரில் குரத்தி குரிசொல்லுகிறதென்று தரணிதேவி கேழ்விப்பட்டு குரத்தியை வரவழைத்தாள். தரணிதேவி குரத்தியை தனக்கு குறிசொல்லும்படிகேட்க அதற்கு குறத்திவேடம்பூண்ட ஹரி இவ்வாருசொல்லத் தொடங்கினார். உன் எண்ணமானது கைகூடிவரும் நீ உன் பெண்குழந்தைபேரில் ஒருஎண்ணம் கொண்டிருக்கிறாய். அவள் பூந்தோட்டத்தில் ஒரு புருஷனைக்கண்டு அதனால் தாபஜ்வரமடைந்தாள். அந்தபுருஷன்யாரென பொன்மலையின்பேரில் பட்ட நாமதரித்துக்கொண்டு சரணமடைந்தவர்களை ரக்ஷித்துக்கொண்டும் தருமவிரோதிகளை நசிக்கச்செய்துக்கொண்டும் இருப்பார். யவர் ஸ்ரீமந்நாராயணரே தவிர நரனல்ல.



அவர்உன்பெண்ணை விவாகம் செய்வதற்கு எண்ணம்கொண்டிருக்கிறான். உன்பெண்ணும் அவர்பேரில் பிரயம்கொண்டிருக்கிறாள். ஆகையால் அவருக்கு உன்பெண்ணைகொடுத்து விவாகம்செய்தால் சுகமாய் வாழ்வாள். இன்னும்கொஞ்சம் நேரத்தில் கல்யாண பிரஸ்தாபனைசெய்வதற்காக ஓர் பெண்பிள்ளை வருவாள் யான் சொன்னதெல்லாம் உண்மையானபிறகு இனாம் வாங்கிகொள்ளுகிறேனென்று சொல்லி எழுந்து அப்புறம்போய் தன் நிஜரூபத்தைகொண்டு ஸ்ரீஹரி திருவேங்கடமலையை சேர்ந்தார்.

### வகுளமாலிகை கல்யாண பிரஸ்தாபனை செய்தல்.

ருத்திராபிஷேகத்தின் தீர்த்தத்தை சுமங்கலி ஸ்திரீகள் தரணிதேவியினிடம் கொண்டுவர அதை தரணிதேவி பத்மாவதிக்கு கொடுத்தாள். வகுளமாலிகை சுமங்கிலிஸ்திரீகளைக் கூட்டிவந்து தரணிதேவியை பார்த்து நமஸ்கரிக்க தரணிதேவி நீயாரென விசாரிக்க அதற்குவகுளமாலிகை இவ்வாரு சொல்லுகிறாள். ஓதரணிதேவி நான்திருபதியிலிருக்கும் வெங்கடாசலபதி அனுப்பிவந்தேன். கல்யாணவிஷயமாய் என்னை அவர் யனுப்பினார். உன் பெண்ணாகிய பத்மாவதியை அவருக்கு கொடுத்து விவாகம்செய்யும்படி பிரார்த்திக்கிறேன். என் பேர் வகுளமாலிகை என்றாள், அதற்கு தரணிதேவி அவர் குலகோத்திரங்கள் என்னவென்றுகேட்க வகுளமாலிகை அவர் தாய்தந்தை தேவகீ வசுதேவரென்றும் அவர்வம்ஸம் சந்திரவம்ஸமென்றும் வசிஷ்டகோத்திரமென்றும் அவர் ரூபலாவண்யத்தில் மன்மதனைப்பெற்றெடுத்தமகத் பிரகாஸ வைபவமுள்ள ஸ்ரீமகாவிஷ்ணுவை போலொத்தவரென்றும் சொன்னாள். அதைகேட்ட தரணிதேவி மிகுந்த சந்தோஷத்துடன் பர்த்தாவுக்கு தெரிவிக்க அவரும் மகாபாக்கியமென்று சம்மதித்து விவாகத்திற்கு லக்கினம் ஏற்பாடுசெய்ய தன் குருவாகியசுக மகரிஷியை வரவழைத்து கல்யாணபத்திரிகையை எழுதினார். அப்பத்திரிகையில் மஞ்கள்தடவி சுகரிடம் கொடுத்து அனுப்பித்தார். அதை சுகர் எடுத்துக்கொண்டுபோய் வெங்கடமலையின்பேரில் எழுந்தருளியபரந்தாமன் கையில்கொடுக்க அவரதைப்படித்து வளர்பிறை தசமிராத்திரி சுபமுகூர்த்தத்திற்கு நாங்கள் இஷ்டஜன பந்துசமேதர்களாய் அவ்விடம் வருகிறோமென்று எழுதிசுகரிடமே கொடுத்து அனுப்பிவிட்டார்.

### பத்மாவதி விவாஹ மகோற்சவம்.

இந்தசேதி கருத்மந்தனும் ஆதிசேஷனும் தேவகோடிகளுக்கு

தெரிவிக்க பிரம்மதேவர் சாவித்திரி காயத்திரி ஸரஸ்வதி சமேதராய் அம்ஸவாகனமேறியும், பரமேஸ்வரர் பார்வதிசமேதராய் நந்திவாகனமேறியும், திக்பாலகர்களும், மகரிஷிகளும், தேவகணங்களும், இந்திரன் சூரிய சந்திர முதலியவர்கள் திருவேங்கடமலைக்குவந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வசிஷ்டர் வராகஸ்வாமி ஸன்னதியில் எக்கிய காயங்களைசெய்து வந்தார். பிரம்மதேவர் கல்யாண பீடத்தைநிர்மித்தார். பார்வதி முதலியவர்கள் ஸ்வாமிக்கு அப்பியங்கனம் செய்வதற்காக ஹரியை கூப்பிட அவர் லக்ஷ்மிதேவி விவாகத்திற்கு வாரதகுறையைதெரிவிக்க சூரியனை லோகமாதாவாகிய லக்ஷ்மிதேவியை அழைத்துக்கொண்டு வருவதற்கு கொல்லாபுரம் அனுப்பித்தார்கள். சூரியன் லக்ஷ்மியம்மனை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான்.

குபேரனிடம் கடன் வாங்குதல்.

கல்யாண சிலவுக்காக பணம்வேண்டுமேயென்று சிந்தித்து பிறகு குபேரனிடம் 1 கோடி பதினான்குலக்ஷம் 1,1400000 பணம்வாங்கி அதற்கு வருஷந்தோறும் வட்டி கட்டும்படியாகவும் கலியுகம் முடிவில் அசலை கொடுக்கும்படியாகவும் பத்திரம் எழுதி அதற்கு சங்கரனும், பிரம்மாவும், சாக்ஷிகளாக, ஏற்பாடுசெய்யப்பட்டது. இதனால் வெங்கடேசபெருமாள் வட்டிகாசுபெருமாளென்று பேருள்ளவராய் பிரார்த்தனை மூலமாக ஜனங்களிடம் பணம் வாங்குவார்.

ஸ்ரீஹரி நாராயணபுரம் சேருதல்.

அப்பொழுது அருந்ததி முதலிய ஸ்ரீரத்தினங்கள் சோபனபாட்டுகளைபாட மங்களவாத்தியங்கள் சப்திக்க மகாலக்ஷ்மியும் பார்வதி சாவித்திரி சரஸ்வதி இந்திராணிமுதலியவர்கள் ஆலாத்திஎடுக்க குமாரஸ்வாமி பாண்டவதீர்த்தம் முதல் ஸ்ரீசைலம் வரையிலும் இருக்கும் ஸ்தளத்தை பரிஸுத்தம்செய்ய வாயுதேவனும் பிரம்மாவும் தேவேந்திரன் முதலிய சகல தேவகணங்கள்கூடி அவரவர்களுடைய வாகனங்கள் ஏறி ஸ்ரீஹரியுடன் புரப்பட்டு நாராயணபுரம்வர ஆகாஸராஜன் மந்திரிபரிவாரங்களோடு எதிர்நோக்கிப்போய் அவர்களை வரவழைத்து விவாகமகோற்சவத்தை அதியற்புதமாக நடத்த சர்வதேவகணங்கள் புஷ்பவருஷங்களை அபாரமாக வருஷித்தார்கள். சொல்லமுடியாத வைபவத்துடன் விவாகமகோற்சவம் நடந்தேற ஸ்ரீவெங்கடேசபெரு



மாள் பத்மாவதியுடன்கூடி தங்கமலையாகிய திருவேங்கடமலையை சேர்ந்து மிகுந்த வைபவத்துடன் கிரீடித்துக்கொண்டிருந்தார்.

ஸ்ரீ பத்மாவதியின் பூர்வவிர்த்தாந்தம்.

பூர்வத்தில் ஸ்ரீராமர் தன் தகப்பனான தசரதமகாராஜாவின் கட்டளைபடிக்கு சீதாலக்ஷ்மணசமேதராய் காட்டிற்குப்போகையில்பொன் மானைக்கண்டு சீதை அதை வேண்டுமென ராமர்அந்தமானை துரத்திக்கொண்டுபோக லக்ஷ்மணரும் ராமரைத்தேடிப்போக இது நல்லசமயமென்றறிந்து சீதாதேவியை இராவணன் எடுத்து இரதத்தின்பேரில் வைத்துக்கொண்டு போகையில் சீதை இராமாவென்று அழுக அதை அக்னிபகவான் கேட்டு இராவணனைப்பார்த்து நீ எடுத்துக்கொண்டு போவது உண்மையான சீதையல்ல சீதாரூபத்தை உண்டாக்கி பிராம்மணகன்னிகையை ராமர் அவ்விடத்தில் நிறுத்தினார் உண்மையான சீதை என்னிடம் விட்டுப்போனாரென்று சொல்ல அந்தமூடன் நம்பி சீதாதேவியைவிட்டு சீதையைப்போல் வேடம்பூண்ட வேதவதியை கொண்டுபோய்விட்டான். பிறகு இராமர் இலங்கைக்குப்போய் ராவணனைக்கொன்று சிறையிலிருந்த சீதையை விடுதலைசெய்து, நி அக்கினியில் பிரவேசித்தாலொழிய உன்னை கைபிடியேனென, அவ்விதமாக அக்கினியில் பிரவேசிக்கையில், இரண்டு சீதைகள் இருப்பதைக்கண்டு ராமர் ஜானகிதேவியைப்பார்த்து, அந்தவிபரத்தை சோல்லும்படி கேட்க சீதை அப்பொழுது சவிஸ்தாரத்தை சொல்லி தனக்காக ராவணன் சிறையில் அநந்த் கஷ்டங்களை அனுபவித்த வேதவதியை விவாகம்செய்து கொள்ளும்படி பிரார்த்தித்தாள். ராமர் அதற்கு நான் ஏகபத்னி விரதனென்றும், கலியுகத்தில் பக்தரக்ஷணை செய்வதற்கு வெங்கடாசலத்தில் அவதரிப்பேனென்றும், அப்பொழுது இக்கன்னிகையைவிவாகம் செய்வேனென்று சொன்னாராகையால் அந்த விப்ரகன்னிகை பத்மாவதியாய் பிறந்தாள்.

ஸ்ரீதிருச்சானூர் மகத்துவம்.

அனேககாலம் ஸ்ரீவெகடாசலத்தில் பத்மாவதிதேவியுடன் கூடி கிரீடித்துக்கொண்டு இருந்தும் லோகமாதாவாகிய லக்ஷ்மியம்மன் மார்பில் இல்லாதகுறையினால் ஸ்ரீமகாவிஷ்ணு சிந்தையுள்ளவராய் ஸ்ரீலக்ஷ்மிதேவியை தேடவேண்டுமென்கிற உத்தேசம்கொண்டுபத்மாவதிக்கு

சமாதானம்சொல்லி கொல்லாபுரத்திற்குபுறப்பட்டார். ஸ்ரீமகாவிஷ்ணுதன்னைதேட வருகிறாரென்றறிந்து. நேரில் ஸ்வாமிவந்து கூப்பிட்டால் வரமாட்டேனென்று சொல்லுவது மரியாதை யாகாதென்றெண்ணி கொல்லாபுரத்தைவிட்டு பாதளலோகத்தில் விசேஷ யோகமகிமையினால் பிரகாசித்துக்கொண்டிருக்கும் கபிலமாமுனியின் ஆஸ்ரமத்தைபோய்சேர்ந்தாள்.

### ஸ்ரீஹரி தவம் செய்தல்.

பிறகு ஸ்ரீமன்னாராயணன் கொல்லாபுரத்திற்குபோய் லக்ஷ்மிகாணாமல் போனதைப்பற்றி மிகுந்த விசனப்பட்டுக்கொண்டு காடுமேடுகளும் குகைகளும் தேடிக்கொண்டு மறுபடியும் கொல்லாபுரம்சென்று பூர்வத்தில் அகஸ்தியமாமுனி பூஜித்துக்கொண்டிருந்த லக்ஷ்மிவிக்ரகத்தைப் பார்த்து மோகமடைந்து 10 வருடம் தவம்செய்துக்கொண்டிருந்தார் ஒருநாள் ஸ்ரீலக்ஷ்மியைநோக்கி சிந்தித்துக்கொண்டிருக்கையில் அசரீரவாணி அவரைப்பார்த்து இவ்விதமாக சொல்லத்தொடங்கினாள் ஸ்வாமி நீர் இவ்விடத்திற்கு தெற்கில் கிருஷ்ணவேணி ஆற்றிற்கு அப்புரத்தில் சுவர்ணமுகி ஆற்றிற்கு வடக்கில் சுகாஸ்ரமத்தில் நின்று தபஸியாய் சுவர்க்கலோகத்திலிருந்து ஆயிரம் இதழ்களுள்ள தாமரைகமலங்களை வரவழைத்து திருக்குளத்தைவெட்டி அதில் அவைகளை பிரகாசிக்கச்செய்து வாடாமல் இருப்பதற்காக அக்குளத்திற்கு கிழக்கில் சூரியனை பிரதிஷ்டைசெய்து அந்தகமலத்தின்பேரில் திருஷ்டியை நிருத்தி மனதில் லக்ஷ்மிமந்திரத்தை தியானித்துக்கொண்டு தவம்செயதால் லக்ஷ்மிதேவி பிரஸன்னமாய் உன்னை மருபடியும் அடையுமென்று சொல்ல அசரீரவாணி வாக்கின்படிக்கே அகஸ்தியாஸ்ரமம் வழியாய்போய் சுகாஸ்ரமத்தைசேர்ந்து வாயுபகவானை தியானிக்க அவர் பிரஸன்னராய் அஞ்சலிபத்தராய் நிற்க யவரை ஸ்வாமிகண்டு ஓ மாருதி நீதேவலோகம்சென்று தேவேந்திரனைக்கண்டு மந்தாநியிலிருக்கும் ஸ்ரேஷ்டமாகிய பத்மங்களைக்கொண்டுவந்து தரவேணுமென வாயுதேவன் யவ்விதமாகவே கொண்டுவர யவரைப்பார்த்து இந்த ஸவிஸ்தாரத்தை யாருக்கும் தெரியபடுத்தவேண்டாமென யப்படியே சம்மதித்து வாயுபகவான் மறைந்தார். பிறகு தன்கையிலிருக்கும் குந்தலாயுதத்தினால் ஒருகுளத்தை வெட்டி யந்த தாமரகமலங்களை யக்குளத்தில்விட்டு இரவுபகலும் மலர்ந்திருக்கும்பொருட்டு கிழக்கில் சூரியநாராயண தேவாலயத்தை பிரதிஷ்டைசெயது பனிரெண்டுவருடம் ராஜனைப்போல் வேடந்தரித்து தவம்செய்தார்.



### ரம்பாதிகள் ஹரியை சோதித்தல்.

தேவேந்திரன் பூமியில் யாரோயரசன் கோரமான தவம்செய்து தன்னுடைய பதவிக்குவர யென்னுகிறானென்று சங்கையுள்ளவனாய் ரம்பா, ஊர்வசி, திலோத்தமை என்கிற தேவதாசிகளை தவத்தை பங்கப்படுத்தயனுபித்தான் யவர்கள் ஸ்ரீஹரிதவம்செய்யுமிடத்திற்குவந்து புஷ்பங்களை கொய்துக்கொண்டு கிளிகளைப்போல் கலகலவென்று பெசிக்கொண்டும் பகபகவென்று சிரித்துக்கொண்டும் அநேகவிதங்களாக மாய்கைசெய்தார்கள். அதை ஸ்ரீஹரி தெரிந்துக்கொண்டு மந்தஹாஸராய் களிக்காமல் ஸ்வர்ணம் ஸஹஸ்த்ரதள பத்மத்தின்பேரிலேயேமனத்தை நிருத்திருந்தார். அப்பொழுது அந்த ரத்னமணிகள் ஸ்ரீஹரியைமோகித்து அவர்பேரில் புஷ்பங்களைவீசியும், பரிஹாஸத்தோடு நகைத்துக்கொண்டும், நாட்டியங்களைசெய்துக்கொண்டும் மனதை ரமிக்கும்ப்டியான பாட்டுகளை பாடிக்கொண்டும் வீணைகள் வாசித்துக்கொண்டு அநேக லீலாவினோதங்களைச்செய்தும் ஸ்ரீஹரி சலிக்காமல் இருக்கிறதைப்பார்த்து அலண்டு ஆச்சர்யமடைந்தார்கள்.

### ஸ்ரீஹரி மோஹினிதேவதயை சிருஷ்டி செயதல்.

ஸ்ரீமந்நாராயணன் அப்பொழுது மோகினிதேவதயை சிருஷ்டித்து தன்னிடமிருக்கும்படி கட்டளையிட்டார். ரம்பாதிகள் அந்த மொகினிதேவதையின் ரூபலாவண்யங்களைப்பார்த்து வெட்கப்பட்டு தேவேந்திரனிடம்சென்று ஸ்வாமி, அவர் நரநல்ல சாக்ஷாத் நாராயணமூர்த்தியே என்பதற்கு சந்தேகமில்லை யென்றுசொல்ல தேவேந்திரன் ஸ்ரீஹரியை நறனென்றெண்ணி பரிசோதித்து அபசாரமென்று விசாரப்பட்டான். பிறகு ஸ்ரீஹரி மோகினிதேவதயைப்பார்த்து நீ அங்கங்கு பக்தர்களால் பூஜிக்கப்பட்டிருந்து, எதாகதியை யடைவாயென்று சொல்லி அசையாமல் தவம்செய்துக்கொண்டிருந்தார்.

### லக்ஷ்மி கபில சம்வாதம்.

கபிலமுனிவரைப்பார்த்து லக்ஷ்மிதேவி தனக்காக ஸ்ரீஹரி தவம் செய்கிறார். என்னசெய்வேனென்று சிந்திக்கையில் கபிலமாமுனி லக்ஷ்மிதேவிக்கு ஸ்ரீ ஹரியின்பேரில் கோபமுண்டாவதற்கு காரணமென்னவென்றுகேட்டு தெரிந்துக்கொண்டு இவ்விதமாக சொன்னார். —என்னைபெற்றதாயே, பிள்ளைக்குபிள்ளையாகிய பிருகுவின்பேரில் இவ்

வளவுசோபம் உண்டாயிருப்பது நியாயமல்ல மும்மூர்த்திகளை பரிக்ஷித்து ஸ்ரீ ஹரியின் பிரபாவத்தை பிரக்யாதிசெய்வதற்காக பிருகுஅவ்விதமாய் நடந்தான். மேலும் ஸ்ரீ ஹரியை இவ்விதமாக கஷ்டப்படும்படிச்செய்தும் உன்னைநோக்கி இவ்வளவு தவம்செய்யும்படி நேரிடச்செய்கிறதும் பதிவிரதைகளுக்கு தர்மமல்ல, ஆகையால் தாயே நீ ஸ்ரீ ஹரியனதை நிருத்திருக்கும் சமலத்தில்தொடர்ந்து மூவ்லோகங்களும் முப்பத்துமுக்கோடி தெய்வங்களும் மெச்சி கீர்த்திகள்பாட அந்தஎம்பெருமான் திருவக்ஷத்தில் சேர்வாய், நான்சொன்னது நியாயமானபடியால் மன்னிக்கவேணுமென லக்ஷ்மியம்மன் ஸ்ரீ ஹரியைவிட்டுவந்தது தன்னுடைய தப்பிதமென்றெண்ணி அந்த ஜகதீசனை எம்பெருமானை மறுபடியும் சேர நிச்சயித்து.

### அலர்மய்காதேவியின் பிறப்பு.

ஸ்ரீ ஹரி பனைதநிருத்திருக்கும் தாமரையின் வழியாக ஸ்ரீ ஹரி தவம்செய்த பதிமூன்றும்வருடத்தில் கார்த்திகைமாதம் சுத்தபஞ்சமி உத்திராடம் கூடிய வெள்ளிக்கிழமை சுபதினத்தில் மகாசௌந்தர்ய லாவண்ணிய பிரகாசத்தோடு பதினாறுவயதுள்ள யவ்வனகன்னிகா ரூபத்தைதரித்து நாலுகைகளுடனும் கமலத்தையும் புஷ்பமாலையும் தரித்துக்கொண்டு பிரசன்னமாகையில் ஆகாயத்தில் பிரம்மாதிதெய்வங்கள் புஷ்பங்களை வருஷித்தார்கள். அப்ஸரஸாதி தேவதாஸிகள் வீணாதிகான ருத்தியங்கள்செய்துஜெயஜெயலக்ஷ்மி அலர்மங்காதேவியென்று கொண்டாடினார்கள்.

### லக்ஷ்மி ஹரியை அடைதல்.

லக்ஷ்மியம்மன் பேசாமல் நிற்பதைப்பார்த்து பிரம்மாதிதெய்வங்கள் அந்தசுபலக்கினமே ஜெகதீசனுடைய திருமார்பில் சேருவதற்கு நல்லகாலமென்று பிருகுவுக்கு சைகைசெய்தார்கள். அப்பொழுது பிருகு முன்வந்து என்னைபெற்றதாயே, நான்செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டும். சரணாகதன்,

கருணையெனும்கடலை உன்கண்களில் தரியித்தகமலால்யாபெற்றதாயே சரணென்றேனெந்த அகுற்றங்களாவற்றும் க்ஷமியித்துகாத்தருள்வாய் தாரணியில் தான்பெற்ற பிள்ளைகள் செய்திடும் தப்பிதம் தாயல்லவோ மரந்திட்டு சிறியேனை மன்னிக்கவேண்டும் மதுமாத நீயரியாததோ.



என்றுசொல்ல லக்ஷ்மிதேவிக்கு அநந்தசந்தோஷமுண்டாய்விட்டது. அப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மியை ஹரியை சேருமென்று பிரம்மாதிதேவகணங்கள்,

மலர்ந்திட்டகமலத்தில் மங்கையாய் தங்கமாய் மாணிக்கமணியுமாயும் அலர்மேலுதேவியென யனைவருங்கொண்டாட யகிலாண்டகோடியெல்லாம், கலகலென்றுநதகடலிலே மூழ்கவே கருணையோடெங்கள் தாயே நிலமாக ஹரிமார்பில்நிலையாக குடிகொண்டு நின்றுவாழ்ந்தருளுவாயே. ஸ்தோத்திரம்செய்ய லக்ஷ்மி கையிலிருந்த பூமாலையை பகவான் கழுத்தில் தரித்து மறுபடியும் வக்ஷத்தில் சேர்ந்தாள்.

இவ்விஷயம் பத்மபுராணத்தில் அடியில்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்தபேதம் கல்பாந்தரவிவஸ்தையினால் ஏற்பட்டதென்றறியலாம்:—பிறகு மகாவிஷ்ணு மார்பை உதைத்தபோது லக்ஷ்மி தேவி பாதாளத்திற்குச்சென்று கபிலமகாரிஷியால் பூஜிக்கப்பட்டு, பிறகு கொல்லாபுரம்போய், வேங்கடன்மலைக்கு தென்பாகத்தில்சுவர்ணமுகிநதிதீரத்திலிருக்கும் சுகாஸ்ரமத்தில் ஏகாந்தமாய் வசித்துவந்தாள். வெங்கடேஸ்வரர் லக்ஷ்மிதேவியைத் தேடிக்கொண்டு அசரீரி வாக்கினால் லக்ஷ்மி இருப்பிடம்தெரிந்து அந்த சுகாஸ்ரமத்திற்குச்சென்று தன்கையிலிருக்கும் பத்மசரோவரத்திலிருந்து தங்கமயமான தாமரைபுஷ்பங்களைக்கொண்டுவந்து அந்தகுளத்தில்போட்டு அந்தபுஷ்பங்கள் இரவும் பகலும் மலர்ந்திருக்கும்பொருட்டு அவ்விடத்தில் சூரியநாராயணதேவாலயமொன்றை பிரதிஷ்டைசெய்து பன்னிரெண்டு வருஷம் தவஞ்செய்தார். பதிமூன்றுவதுவருடம் கார்திக சுத்தபஞ்சமி சுக்கிரவாரம் உத்திராநக்ஷத்திரதினத்தில் லக்ஷ்மிதேவி அலர்மேல்மங்கை அநேக தாசி ஜனங்களுடன் சர்வாபரணபூஷிதயாய் ஆகாயத்தினின்று தேவதைகள் புஷ்பவருஷம் வருஷிக்க ரம்பை முதலிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாட கந்தருவர்கள் கீதங்கள்பாட தாமரை புஷ்பத்தினின்று 16 வயதுள்ள யௌவனஸ்திரீயாக உற்பவித்து சுவாமியைக்கண்டு தான்கொண்டுவந்து நீலோத்பலபுஷ்பமாலையை சர்வலோகசரண்யராகிய அவர் கழுத்தில்சாத்தி ஆலிங்கனம் செய்துக்கொண்டு அவ்விடத்லே இருக்கும்படியாக விரும்பினாள்.

## ஸ்ரீ திருச்சானூர் அலமேலுமங்காபுரம்.

ஸ்ரீலக்ஷ்மியம்மன் அவதரித்த தாமரைக்குளமாகையால் இதற்கு பத்மசரோவரதீர்த்தமென்று பெயர் உண்டாயிற்று. ஸ்ரீஹரி வக்ஷத்தில் லக்ஷ்மிபிரவேசித்த உடனே பிரம்மருத்திராதி தேவகணங்கள் அந்த தீர்த்தத்தை அநேகவிதங்களாகக்கொண்டாடி தங்கள் சிரங்களின் பேரில் ப்ரோக்ஷித்துக்கொண்டார். ஆகையால் கார்த்திகை மாதத்தில் சுத்தபஞ்சமிதினத்தில் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவர்களாய் சகலசுகங்களை அனுபவிப்பார்கள்.

பத்மசரோவர தீர்த்தமுள்ள இக்ஷேத்திரம் பத்மராஜபுரமென்னும் கீழ்திருப்பதிக்கு 3 மைலில் இருக்கிறது. இதுசுகாஸ்ரமம் இதில் சுகர் குமாரனாகிய சாயாசுகர் வசிப்பதாக புராணசம்மதம் ஆகையால் இதற்கு திருசுகனூரென்றும் திருச்சானூரென்றும் பெயர்உண்டாயிற்று. பத்மத்தில் உண்டானபடியால் லக்ஷ்மிதேவிக்கு பத்மாவதிதேவதை யென்றும் மலர்ந்த பத்மத்தில் பிறந்ததினால் அலர்மங்காதேவதை யென்றும் இந்த க்ஷேத்திரத்துக்கு அலர்மங்காக்ஷேத்திரமென்றும் பெயருண்டாயிற்று. ஸ்ரீமகாவிஷ்ணுவினால் பிரதிஷ்டை செய்த சூரிய தேவாலயம் திருக்குளத்தின் கரையின்பேரில் இருக்கிறது. ஸ்ரீசுகரால் ஏற்படுத்திய ஸ்ரீபலராமசமேத ஸ்ரீவேணுகோபாலஸ்வாமி தேவாலயமும் இருக்கின்றது. ஸ்ரீசுந்தரவரதராஜப்பெருமாள் சன்னதியும் இவ்விடத்திலிருக்கின்றது. இந்தபுரத்திற்கு மேற்கில் யோகிமல்லாவரம் என்று ஓர் சிரியகிராமம் இருக்கின்றது. பூர்வத்தில் தபோவந்தனர்கள் சங்கம்சேரும்படியான இடம் புராணநிர்மிதமான சிவதேவாலயமும் இருக்கின்றது. 1 மைல் தூரத்தில் முனிகள் பூடியென்கிற கிராமம் இருக்கின்றது. பூர்வத்தில் முனிகள் ஆஸ்ரமங்களைக்கட்டிக்கொண்டு தபோயெக்கியங்கள் செய்தபடியால் இந்தபெயர் உண்டாயிற்று. திரிச்சானூரில் பிரதிவருஷந்தோரும் கார்த்திகைமாதத்தில் 10 நாள் கற்பகவல்லியாகிய அலிமேலுமங்கைதேவிக்கு பிரம்மோற்சவமும் பங்குனியில் 9 நாள் பத்மசரோவரதீர்த்தத்தில் தெப்பல் உற்சவமும் பிரதி வெள்ளிக்கிழமை தோட்ட உற்சவமும் நடந்துவருகின்றது.

## ஸ்ரீ திருப்பதி பிரம்மோற்சவம்.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் அலிமேலுமங்காதேவியை மார்பில் அணைத்து ஸ்ரீ திருப்பதி புண்ணியக்ஷேத்திரத்தில் நிற்க தன் குமாரனாகிய பிரம்மதேவர்வந்து ஸ்வாமி உங்களுக்கு ம்மோற்சவம் நடத்த வேணுமென்றுவலுடையவனாய் இருப்பதால் உத்திரவளிக்கவேண்டுமென பிரார்த்திக்கையில் தன்புத்திரன் வாக்கியங்களைக்கேட்டு ஆநந்தித்தவராய் சம்மதித்தார். பிரம்மோற்சவத்தை நடத்துவதற்காக



அதனாதத்தை செய்யும்படி விஸ்வகர்மாவுக்கு உத்திரவு செய்தார். அங்குரம் முடிந்ததே முதல் சேஷவாகனத்தின்பேரிலும் 2-வது நாள் அன்னவாகனத்தின்பேரிலும் 3-வது நாள் சிம்மவாகனத்தின் பேரிலும் அன்றை இராத்திரி புஷ்பவாகனத்தின்பேரிலும் 4-வதுநாள் பூபால உற்சவமும் அன்றை இராத்திரி கல்பகவிருக்ஷ உற்சவமும் 5வது நாள் ஆந்தோளி உற்சவமும் அன்றை இராத்திரி கருடோற்சவமும் 6-வது நாள் அனுமந்தர்கள் உற்சவமும் அன்றைமாலை வசந்தோற்சவமும் இராத்திரி யானைவாகனோற்சவமும் 7-வதுநாள் காலையில் சூரியபிரபவுற்சவமும் இராத்திரி சந்திரபிரபவுற்சவமும் 8-வதுநாள் சோடசமகாதான கிருத்தியங்களை நடத்தி பிறகு தங்கமலையைப்போல் பிரகாசிப்பதும் நவரத்தினகசிதமாய் அனேகவானங்களுடன் ஜொலித்துக்கொண்டிருக்கும் திவ்வியரதத்தின்பேரில் ஸ்ரீ பூநீலாசமேதராகிய வெங்கடேசப்பெருமானை ஆசநாருடராக அமர்த்தி பிரம்மாதிதேவகணங்கள் நடப்பிக்க சகலதிக்குபாலர்களும் கருடகந்தர்வ கின்னரகிம்புருஷ சித்தவித்யாதரர்கள் சேவிக்க தேவதுந்துபிகள் கோஷிக்க மகா அற்புதமாக ரம்பா மேனகை ஊர்வசி திலோத்தமாதி தேவதாசிகள் அந்தரதத்தின்பேரில் புஷ்பங்களை இரைத்து ஆடி பாடி ஸ்ரீஹரியை கொண்டாடினார்கள். அப்பொழுது பக்தகோடிகள ஸ்ரீஹரிநாமத்தை சங்கீர்த்தனம் செய்தார்கள். கவிகள் கீர்த்தனைகளைபாடினார்கள். பண்டிதர்களும் பிராம்மணர்களும் உபநிஷத வேதவாக்கியங்களைசாதித்தார்கள். பிராம்மணஸ்திரீகள் பாட்டுகளைபாடி மங்களாரதிகளை கொடுத்தார்கள் பாகவதகூட்டங்கள் பக்தியோடுஸ்வாமியைபாடியாடிகொண்டாடினார்கள்

இந்த ரதோற்சவத்தை பார்பதற்காக 56 தேச அரசர்களும் அவர்களுடைய வாகனங்களையேரி பரிவாரங்களுடன் வந்தார்கள். இவ்விதமாக அதுமுதல் புரட்டாசிமாதத்தில் உத்திராடநக்ஷத்திரத்தில் பிரதிவருஷமும் ஸ்ரீவேங்கடேசப்பெருமானுக்கு பிரம்மோற்சவம் நடந்தேரிவருகிறது.

திருச்சானூர் அலர்மேலுமங்கையம்மன்
பிரம்மவுத்ஸவ கும்மி.

சித்திரம்போன்றமடமைலே
இந்த திருச்சானூர் வுத்ஸவத்தை
பத்தினி பெண்களா எத்திசைநீங்களும்
பாவையேபார்க்கலாம் வாங்களடி. 1
சுற்றிலும் பிராமணால் வீடுகளமைத்து
நடுசிங்காரமானதோர் மண்டபமும்
எத்திசைபார்த்தாலும் சந்திரன் சூரியன்போல்
யேற்றிவைத்த தீபம் என்னசெய்வேன். 2

அங்கங்கே பல்திப ஸ்தானங்களும்
நல்ல ஆனதோர் நாட்டிய பந்தல்களும்
எங்கும்பரவிய வெகுஜனகூட்டங்கள்
எத்தபடி நிர்குரூர் பாருங்கடி. 3
பாருங்கடி சுற்றிவாருங்கடி நீங்கள்
பக்ஷமாயொன்றுகவே பாருங்கடி
கோரியமங்கையின் வுத்ஸவவேடிக்கை
எப்படி செய்குரார் பாருங்கடி.
எத்தனையோவித பக்ஷிகளவைத்து
வத்த நகைகளை பூட்டிவிட்டு
முற்றிலும் அரசா மெச்சிப்புகழ்ந்தோர்
பஞ்சமி வுத்ஸவ பாருங்கடி. 5
தங்கத்திருல்செய்த கருடவாஹனம்
பக்ஷமுடன் சித்திரவேலைசெய்து
எங்கும்பொருந்தவே நல்பச்சை மாணிக்கம்
இட்டிழைத்ததை பாருங்கடி. 6
தேவர்கள் செய்ததோர் அனுபந்தவாகனம்
பத்மாவதியேரும் வாகனமும்
சந்தோஷமாகவே வந்ததோர் மங்கையின்
மேன்மையை சொல்லியே பாடுங்கடி. 7
வேடிக்கைபந்தலை பாருங்கடி
ஜனங்கள் எப்படிபேசுரார் பாருங்கடி
குளத்தைசுற்றி நாம்பார்த்தாலும்
பிரபுக்கள் கூட்டங்கள் எப்படிநிர்குரார் பாருங்கடி.
தங்கநிரமுள்ள பத்மாவதியம்மன்
தங்கபொருளுள்ள ஆடவளாம
எங்கும்தேடிய அலமேலுமங்கையை
சேவித்து கும்மி யடியுங்கடி. 9
ஆகாயவணங்கள் தான்வெடிக்க
அப்போ அனபுடன் நக்ஷத்திரங்கள் போல்கலந்து
மேலானபாணங்கள் தான்வெடிக்க
அதை மெல்லிய நீங்கள் பாருங்கடி. 10
அன்னதானங்கள் செய்தார்கள் அன்று
ஆலயவுத்ஸவம் செய்தார்கள்
எண்ண வண்ணாத பஞ்சமிஸ்நானங்கள்
எப்படி செய்குரார் பாருங்கடி. 11



மீனாக்ஷியம்மன் கோவிலும்
காஞ்சி காமாக்ஷியம்மன் சன்னதியில்
மேலானகாசி ராமேஸ்வரத்தில்
மேலான திருச்சானூர் பாருங்கடி. 12
இருபத்திநான்கு ஜில்லாமுழுமையும்
அங்கங்கே வேடிக்கை தானமைத்து
வுலகம்புகழவே அலர்மேலுமங்கையை
சேவித்து கும்மியடியுங்கடி. 13
திருச்சானூர் அலர்மேலுமங்கைக்கு
செய்த பஞ்சமி வுத்ஸவத்தை
மிதமாய்பாண வேடிக்கைசெய்துமே
நேந்தமங்கையை பாருங்கடி. 14
சத்திய விஜயநகரகும்பகோணம்
சார்ந்த அணைமலை க்ஷேத்திரத்தில்
எத்தனையோ பணங்கள் செலவழித்து பக்தர்கள்
வுத்தமர் வாரதை பாருங்கடி. 15
தஞ்சைகுடந்தை மதுரை நகர்முதல்
இன்னும் பலபலவூர்களெல்லாம
கன்னியமாகவே காசுசெலவிட்டு
பக்தர்கள் வருவதை பாருங்கடி. 16
சீமையுலகெங்கும் வேதியர்மார்களும்
சிரந்த ஞானிகள் கூட்டங்களும்
நேயமாக மங்கையின் வுத்ஸவம
நின்றுமே சேவித்து பாருங்கடி. 17
ஈசன் வசிக்கும் கைலாயகிரியைபோல்
எண்ணில்லாத திருச்சானூர் வேடிக்கையை
பூர்த்தியாய்செய்த பஞ்சமி வுத்ஸவத்தை
புகழ்ந்து கும்மியடியுங்கடி. 18
மங்களமாகவே திருப்பதிவேடிக்கை
எங்கும் புகழ்ந்துமே தான்படிக்க
சிங்காரமாகவே கன்னய்யநாயுடு
சொல்லி எழுதினன் பாருங்கடி. 19

வெங்கடேஸ்வர சிங்கார கும்மி.

மஹிமைவிளங்கும் என்ற வர்னமெட்டு.

மஹிமைவிளங்கும் திருப்பதிநகர் வேங்கடேசமூர்த்தி
அவர்பேர் விளங்கும் கீர்த்திபோக்கும் பிரம்மமூர்த்தி

ஸ்வாமியின்பேரில் தும்பிபாட
சாஸ்வதியம்மன்றனையே. 1

எங்கும்விளங்கும் ஏழுமலையின் அன்பமானக்ஷேத்திரம்
புஷ்கரணி அமுர்ததீர்த்தம்
கருடோற்சவ பிரதக்ஷணம்
அவருடைய மகிமையும். 2

அழகான துவஜஸ்தம்பமும் நேர்த்தியான மண்டபமும்
அலமேலுமங்கையம்மாளுடைய கிருபையும்
மங்கையம்மாள் வுன்கிருபையே
ஜகத்திலெங்கும்புகழ. 3

தேவாதிதேவரெல்லாம் அவர்புகழைநாட
நாலாயிரம்பாடவே தங்களைகொண்டாட
மங்கையம்மாள் வுன்கிருபையே
ஜகத்திலெங்கும்புகழ. 4

சேஷாத்திரி மலையின்மீது ஸ்ரீனிவாசமூர்த்தி
புஷ்கரணியில் ஸ்நாநம் பண்ணுகிறநேர்த்தி
சகலபாபநிவர்த்தி
பக்திபண்ணின பேர்களுக்கு முத்திகொடுக்கும் மூர்த்தி. 5

பாவாஜிமார்கள் கூடிக்கொண்டு போட்டார்களொருதிட்டம்
படிடய அனர்ந்துபார்த்தால் மட்டம்
வழியையழித்துகட்டினகட்டம் வேங்கடேஸ்வரருக்கு கிஷ்டம்
சங்கையற்ற பேர்கள்வந்து ஸ்நானம் பண்ணுகிற கூட்டம். 6

கருணையுள்ள மங்கையே என்கருத்திலிருப்பாயே
மாடவீதி வருகும்போது கண்ணாலே நான்கண்டேன்
பாததரிசனம் தன்னை கார்த்து ரக்ஷியும் என்னை
அந்தகாலத்தில் கைகொடுத்து அழைத்துபோகச்சொன்னேன். 7

பூமிகுள்ள அதிகமான பூலோகவைகுண்டம் அவரவர் மந்தகாசம்
எங்கும் நிரைந்த திருமலையின் இன்பமானக்ஷேத்திரம்
பாபநாச அமுர்ததீர்த்தம் அவரை கையை கூப்பி
தரிசித்தவருக்கு கிடைக்குமே வைகுண்டம். 8

சிருடனே பாடிடவும் யாவர்களும் புகழ்ந்து
கருணையுள்ள ஸ்ரீவியாசா அச்சுகூடத்தை கருத்துதனிலே நினைத்து
அருமையுள்ள பூதலத்தில் குதித்துபாட நீயே
பிரியமுடன் கன்னய்யனை அருள்புரிவாய்தாயே. 9

முற்றிற்று.